# மதுரமங்கலம் இலவச TNPSC பயிற்சி மையம்

## GROUP 2A

மாதிரி தேர்வு – 2

பொதுத்தமிழ்

( ஏழாம் வகுப்பு )

நேரம் : 80 **Min** தேதி : 13. 05. 2017

வினாக்கள்: 100 தொடர்புக்கு: 8428531209

1. ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறை போகப் பொற்றொடி மடந்தையாக இருந்தனள் என்ற வரிகள் கீழ்க்கண்ட யாரைக் குறிக்கிறது?

அ. மாதவி ஆ. கண்ணகி இ. மணிமேகலை ஈ. தேவந்தி

2. வாக்கியங்களை ஆராய்க.

1. சிலப்பதிகார காப்பியத் தலைவன் கொலைக்களப்பட்ட இடம் - கோவலன் பொட்டல்

2. மதுரை மூதூர் - சிலப்பதிகாரம்

3. மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் பழமையானது – தெற்கு கோபுரம்

4. மரம் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது – மதுரை நாயக்கர் மஹால்

இவற்றுள்

அ. 1 (ம) 2 சரி ஆ. 1, 2 (ம) 3 சரி

இ. 2,3 (ம) 4 சரி ஈ. 2 (ம) 3 சரி

3. துடிப்பிருக்கும் சங்கரதாசு எழுத்தில் எல்லாம் சுவை சொட்டும் சந்த நயம் தோய்ந்திருக்கும் என்று சங்கரதாசு சுவாமிகளைப் புகழ்ந்தவர் யார்?

அ. வரகனேரி சுந்தரம் ஆ. புத்தனேரி சுந்தரம்

இ. புத்தனேரி சுப்ரமணியம் ஈ. வரகனேரி சுந்தரம்

4. கீழ்க்கண்டவற்றுள் சிறந்த நாடக இயக்குநராகவும் திறமையான நடிகராகவும் அறிவுமிக்க ஆசிரியராகவும் விளங்கியவர் யார்?

அ. தமிழ் நாடகத் தலைமையாசிரியர்

ஆ. தமிழ் நாடகப் பேராசிரியர்

இ. தமிழ் நாடகத் தந்தை

ஈ. தமிழ் நாடக மறுமலர்ச்சி தந்தை

5. திருவரங்கம், திருப்பதி, தில்லை ஆகிய இடங்களில் எந்த மன்னர்களின் ஓவியங்கள் காணப்படுகின்றன?

அ. விஜநகர, நாயக்க மன்னர்கள்

ஆ. பல்லவ, நாயக்க மன்னர்கள்

இ. சேர, பல்லவ மன்னர்கள்

ஈ. சோழ, நாயக்க மன்னர்கள்

6. யாதானும் நாடாமல் ஊராமல் என்

னொருவன் <u>சாந்துணையும் கல்லாதவாறு</u> –

இதில் கோடிட்ட சொல்லுக்கு பொருத்தமான பொருளைத் தேர்க:

அ. இறக்கும் நிலை வரையிலும்

ஆ. புகழ் உள்ள வரையிலும்

இ. செல்வம் உள்ள வரையிலும்

ஈ. பொறுமை உள்ள வரையிலும்

7. தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும் என்று கூறியவர் யார்?

அ. கால்டுவெல் ஆ. ஜி.யு.போப் இ. வீரமாமுனிவர் ஈ. பாவாணர்

8. உலக முதன்மொழியாய்த் தோன்றியும் வழக்கொழியாமல் இன்றும் இளமை மாறாமல் கன்னித்தமிழாய் இருந்து வரக் காரணம் தமிழின்?

அ. இன்னோசை ஆ. மெல்லோசை

இ. வல்லோசை ஈ.மொழியோசை

9. ஆதியிலே வாழ்ந்தமுறை நினைக்க வேண்டும்

ஆபத்தில் உற்றவர்க்கு உதவ வேண்டும் - என்று பாடிய புலவன் யார்?

அ. பாரதியார் ஆ. வள்ளலார் இ. வாணிதாசன் ஈ. தாயுமானவர்

10. பொருந்தாத ஒன்றை வெளியேற்று.

அ. ஆய்தம் ஆ. உயிரளபெடை இ. மெய் ஈ. உயிர்மெய்

11. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்று பாடியவர் யார்?

அ. கோவூர் கிழார் ஆ. மோசி கீரன்

இ. ஔவையார் ஈ. கூடலூர் கிழார்

12. விடுபட்ட இடத்தை நிரப்புக.

குலனுடை மையின் …………… சிறந்தன்று

அ. கற்பு ஆ. நாணம் இ. பிணி ஈ. வாய்மை

13. கீழ்க்கண்ட யாரிடம் கற்க வேண்டும் என்ற வேட்கை தணியாததாக இருந்தது?

அ. மீனாட்சி சுந்தரனார் ஆ. உ.வே.சா

இ. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஈ. திரு.விக

14. புதுமை பெறும் வாழ்வே என்று பாடியவர் யார்?

அ. துரைராசு ஆ. துரைமாணிக்கம் இ. திரு.வி.க ஈ.வாணிதாசன்

15. சொல்லத்துடிக்குது என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ. கே.டி.வி. பாலன் ஆ. வீ.கே.டி. பாலன்

இ. டீ.கே.வி. பாலன் ஈ. கே.வீ.டி. பாலன்

16. பழுமரம் இருக்கும் இடத்திற்கு பறவைகள் நாடிச் செல்வது போலப் புலவர் வள்ளல்களை நாடிச் செல்வர் என்று கோவூர் கீழ்க்கண்ட எந்த மன்னனிடம் கூறினார்?

அ. நெடுங்கிள்ளி ஆ. நலங்கிள்ளி

இ. கிள்ளிவளவன் ஈ. மலையமான் திருமுடிக்காரி

17. பெருஞ்சோறு அளித்தல் என்பது?

அ. அரசன் தன் அரண்மனையில் வீரர்களுக்கு பெருவிருந்து அளித்தல்

ஆ. அரசன் தன் அரண்மனையில் புலவர்களுக்கு பெருவிருந்து அளித்தல்

இ. அரசன் தன் அரண்மனையில் வறியவர்களுக்குபெருவிருந்துஅளித்தல்

ஈ.அரசன் தன் அரண்மனையில் அமைச்சர்களுக்கு பெருவிருந்துஅளித்தல்

18. வீரம், சாந்தம், சினம், வியப்பு, உவகை ஆகியவை…. ஆகும்

அ. மெய்ப்பாடுகள் ஆ. மனித இயல்புகள்

இ. பஞ்ச தாளங்கள் ஈ. ஓவியக் கருப்பொருள்கள்

19. பொருந்தாத சொல்லை கண்டறிக?

அ. பரிதிமாற்கலைஞர் ஆ. நாடக உலகின் இமயமலை

இ. நாடகத் தந்தை ஈ. ஔவை டி.கே. சண்முகனார்

20. சரியானதைத் தேர்வு செய்க.

1. ஓவியக் கலைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டியவர்கள் - பாண்டியர்கள்

2. சித்திரகாரப் புலி - முதலாம் மகேந்திரவர்மன்

3. தட்சிண சித்திரம் - சிற்பக்கலையை பற்றி கூறுகிறது

4. சித்தன்னவாசல் ஓவியங்களை ஸ்ரீவல்லபன் மன்னன் காலத்தில் இளம்கௌதமன் வரைந்தார்.

அ. 1 (ம) 2 மட்டும் ஆ. 2,3 (ம) 4 மட்டும்

இ. 2 (ம) 4 மட்டும் ஈ. 1 (ம) 3 மட்டும்

21. தவறற்றதை தேர்ந்தெடு:

அ. மதுரை கல்வெட்டுகளில் 'மருதை' என குறிப்பிடப்படுகிறது

ஆ. நாயக்க மன்னர்கள் தமிழகத்தை எழுபத்தொரு பாளையங்களாக பிரித்தனர்.

இ. நிலவளமும் நீர் வளமும் நிறைந்த பகுதி – மருதம்

ஈ. ஆடு, குதிரைகள் அடைக்கப்படும் இடம் - பட்டி

22. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை

வாய்மையால் காணப் படும் - இக்குறளில் பயின்று வரும் அணி?

அ. எடுத்துக்காட்டு உவமையணி ஆ. உவமை அணி

இ. ஏகதேச உருவகஅணி ஈ. உருவக அணி

23. கால்டுவெல் மறைந்த ஊர் எது?

அ. கொடைக்கானல் ஆ. அயர்லாந்து

இ. இடையன்குடி ஈ. உதகமண்டலம்

24. கூற்று : 1 - இடைச்சொல் தனியாக வந்தால் பொருள் தரும்

கூற்று : 2 - பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை சார்ந்து வராது

அ. கூற்று 1,2 சரி ஆ. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

இ. கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஈ. இரண்டும் தவறு

25. வல்லினம் மிகும் இடத்தை தேர்ந்தெடு.

1. எட்டு, பத்து என்னும் எண்ணுப்பெயரில் வல்லினம் மிகும்

2. பெயரெச்சம் பின் மிகும்

3. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சத்தின் மிகும்

4. அ,இ,உ என்னும் சுட்டெழுத்துக்களின் பின் மிகும்

அ. 1 2 3 ஆ. 2 3 4 இ. 1 3 ஈ. 1 3 4

26. தனிப்பாடல் திரட்டில் பாடிய புலவர்களின் எண்ணிக்கை?

அ. 53 ஆ. 55 இ. 113 ஈ. 110

27. பொருத்துக.

1. பகடு - குதிரை

2. களபம் - கரும்பு

3. வேழம் - சந்தனம்

4. புரவி - எருது

அ. 4 2 1 3 ஆ. 4 3 2 1 இ. 1 2 3 4 ஈ. 4 3 1 2

28. தவறற்றதை தேர்ந்தெடு:

அ. களிறு எறிந்து பெயர்தல் காளைக்கு கடனே – மோசி கீரனார்

ஆ. மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம் - மோசி கீரனார்

இ. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் - மோசி கீரன்

ஈ. சோறும் நீரும் அருமருந்து என்றவர் - ஔவையார்

29. கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன் - யார் கூற்று?

அ. கவியரசு ஆ. கவிமணி இ. வாணிதாசன் ஈ. மருதகாசி

30. மடந்தை என்பதன் பொருள்.?

அ. மருமகள் ஆ. மனைவி இ. மகள் ஈ. மகன்

31. ரோசர்ஸ் இராமானுஜன் கண்டுபிடிப்புகள் என்னும் தலைப்பில் இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டவர் யார்?

அ. ஹார்டி ஆ. இராமானுஜம்

இ. ஈ.எச்.நெவில் ஈ. ஃபிரான்சிஸ் ஸ்பிரிங்

32. நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் என்னும் வரிகள் இடம்பெற்ற நூல்?

அ. திரிகடுகம் ஆ. திருக்குறள் இ. புறநானூறு ஈ. நாலடியார்

33. பயிற்று மொழியை குறித்து சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதனைப் போன்றது என்று கூறியவர் யார்?

அ. விவேகானந்தர் ஆ. காந்தியடிகள் இ. பெரியார் ஈ. நேரு

34. மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்

பூவோடு புரையுஞ் சீரூர் பூவில் இவ்வடிகளில் மாயோன் யார்?

அ. முருகன் ஆ. திருமால் இ. சிவபெருமான் ஈ. பிரம்மன்

35. தங்கப் பதுமையாம் தோழர்களோடு – இவ்வடியில் 'பதுமை' என்னும் சொல் உணர்த்தும் எதிர்ச்சொல் காண்க:

அ. புதுமை ஆ. உருவம் இ. பத்து ஈ. அருவம்

36. தமிழகத்தின் வேர்ட்ஸ்வோர்த் என புகழப்படுபவர் யார்?

அ. புலவர் மணி ஆ. அரங்கசாமி (எ) எத்திராசலு

இ. வாணிதாசன் ஈ. இவை அனைத்தும்

37. பொருந்தாத ஒன்றை கண்டுபிடி.

அ. வெண்பா ஆ. கட்டளைக் கலித்துறை

இ. கலிவிருத்தம் ஈ. ஆசிரியப்பா

38. சிலப்பதிகாரம் எழுதப்பட்ட நூற்றாண்டு?

அ. 2ம் நூற்றாண்டு ஆ. 3ம் நூற்றாண்டு

இ. 4ம் நூற்றாண்டு ஈ. முதலாம் நூற்றாண்டு

39. தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என அழைக்கப்படுவது?

அ. திருநெல்வேலி ஆ. தஞ்சை இ. மதுரை ஈ. ஊட்டி

40. அறிவு நுட்பம் என்ற கதையின் ஆசிரியர் யார்?

அ. ராம்ஜி ஆ. சே.சுந்தரராசன் இ. பி.எம்.முத்து ஈ. ராம்கி

41. காஞ்சி என்பது.........பெயர்

அ. காலப்பெயர் ஆ. குணப்பெயர் இ. இடப்பெயர் ஈ.சினைப்பெயர்

42. வாக்கியங்களை ஆராய்க.

1. தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர் - கவியரசு

2. சிறுகூடல்புரத்தில் 1927 ம் ஆண்டு பிறந்தார்

3. இவரின் புனைப்பெயர்கள் காரைமுத்துப்புலவர், வணங்காமுடி, பார்வதிதாசன், ஆரோக்கியசாமி என பலபெயர்கள் உண்டு

4. இவரின் பட்டப்பெயர் முத்தையா.

இவற்றில்

அ. 1 சரி ஆ. 1 2 3 சரி இ. 2 3 4 1 சரி ஈ. 1 3 சரி

43. பொருந்தாத ஒன்றை வெளியேற்று:

அ. அல்லும் பகலும் ஆ. கண்ணுங்கருத்துமாக

இ. பேரும்புகழும் ஈ. ஓங்கியுயர்ந்த

44. சிங்கங்களே! எழுந்து வாருங்கள் நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள் என்று வீரமுழக்கமிட்டவர் யார்?

அ. வீரத்துறவி ஆ. புரட்சித்துறவி

இ. சமய வேறுபாடற்ற துறவி ஈ. சைவத்துறவி

45. வீட்டிற்கு ஒருவர் மண்சுமந்து வைகை ஆற்றின் கரையை வலுப்படுத்த ஆணையிட்ட மன்னன் யார்?

அ. விஜயரங்க சொக்கநாதன் ஆ. அரிமர்த்தன பாண்டியன்

இ. பாண்டியன் நெடுஞ்செழியன் ஈ. செண்பகப் பாண்டியன்

46. “வளர்ந்துவிட்ட பருவப்பெண் போல்உனக்கு வெட்கமா? – தலை

வளைஞ்சி சும்மா பாக்கிறியே தரையின் பக்கமா” - இப்பாடல் இடம்பெற்றுள்ள தலைப்பு?

அ. சமூகம் ஆ. ஏர்முனை இ. பாரததேசம் ஈ. பொங்கல்வழிபாடு

47. வாக்கியங்களை ஆராய்க.

1. திருச்செந்தில்பதிகம் என்னும் நூலை இயற்றியவர் - சுவாமிநாத தேசிகர்

2. இவரின் வேறுபெயர் சுவாமிநாத தேசிகர் என்னும் ஈசான தேசிகர்

3. ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்

4. அம்மானை பெண்கள் விளையாடும் ஒரு வகை காய் விளையாட்டு

இவற்றுள்,

அ. 1 தவறு 2 3 4 சரி ஆ. 1 3 சரி 2 4 தவறு

இ. 1 2 தவறு 3 4 சரி ஈ. அனைத்தும் சரி

48. பொருத்தமற்றதை தேர்ந்தெடுக்க.

அ. காடு ஆ. மரங்கொத்தி இ. வளையல் ஈ. நாற்காலி

49. உரியது எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டது?

அ. கிராமியக் கதைகள் ஆ. சிந்தனைச் செல்வம்

இ. நன்றி பரிசு ஈ. பண்பை வளர்க்கும் பண்பாட்டு கதைகள்

50. திருவாரூர் நான்மணிமாலை – பிரித்து எழுதுக

அ. திருவாரூர்+ நான்கு + மணி + மாலை

ஆ. திரு + ஆரூர் + நான்மணி + மாலை

இ. திருவாரூர் + நான்மணிமாலை

ஈ. திருவாரூர் + நான்கு + மணிமாலை

51. கீழ்க்கண்டவற்றுள் குமரகுருபரர் இயற்றாத நூல் எது-எவை?

1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் 2. மதுரைக்கலம்பகம்

3. மதுரை மும்மணிக்கோவை 4. நீதிநூல் விளக்கம்

அ. 3 மட்டும் ஆ. 1 2 3 மட்டும்

இ. 3 4 மட்டும் ஈ. ஏதுமில்லை (அனைத்தும் இவர் எழுதிய நூல்கள்)

52. பொருத்துக:

1. அறுவை வீதி - பொற்கடை வீதி

2. கூல வீதி - மன்னர் வாழும் வீதி

3. பொன் வீதி - ஆடைகள் விற்கும் வீதி

4. மன்னவர் வீதி - தானியக்கடை வீதி

அ. 3 4 1 2 ஆ. 3 1 2 4 இ. 3 2 4 1 ஈ. 3 4 2 1

53. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?

அ. ஆறு ஆ. ஐந்து இ. பதினாறு ஈ. இரண்டு

54. பொருத்தமற்றதை தேர்ந்தெடுக்க?

அ. புலிப்பறழ் ஆ. மாவடு இ. கீரிப்பிள்ளை ஈ. மான்கன்று

55. திருஞானசம்பந்தர் யாருடைய காலத்தில் மதுரையில் மங்கையர்கரசி, குலச்சிறையார் உதவியுடன் சைவத்தைக் காத்தார்?

அ. சுந்தரபாண்டியன் ஆ. அரிமர்த்தன பாண்டியன்

இ. செண்பக பாண்டியன் ஈ. கூன் பாண்டியன்

56. நீர் நிற்க, நான் இருக்க இந்தச் சிறப்பு ஒன்று போதாதா –

இக்கூற்றுக்கு உரியவர் யார்?

அ. ஹிட்லர் ஆ. பட்டினத்தடிகள்

இ. இராமானுஜகவிராயர் ஈ. செண்பக பாண்டியன்

57. சங்கத்தமிழ் புலவர் வரிசை என்னும் நூலின் ஆசிரியர்?

அ. புலவர். கணேசன் ஆ. கி.ஆ.பெ.

இ. புலவர் கா. கோவிந்தன் ஈ. மு.வரதராசனார்

58. கழார்ப் பெருந்துறையில் புனல் ஆடி புகழ் சேர்த்தவன் யார்?

அ. கரிகாலன் ஆ. ஆட்டனத்தி

இ. மனுநீதிச்சோழன் ஈ. பாண்டியன் நெடுஞ்செழியன்

59. இளமையில் கல் என்பது...

அ. செய்தி வாக்கியம்     ஆ. உணர்ச்சி வாக்கியம்

இ. கட்டளை வாக்கியம்     ஈ. வினா வாக்கியம்

60. கூரையின் மேல் சேவல் உள்ளது. எவ்வகை வேற்றுமை?

அ. ஐந்தாம் வேற்றுமை     ஆ. ஆறாம் வேற்றுமை

இ. ஏழாம் வேற்றுமை     ஈ. எட்டாம் வேற்றுமை

61. வேமூர் நரசிம்மா என்பவர் கீழ்க்கண்ட எத்திட்டத்தை செயல்படுத்தினார்?

அ. இலவச கல்வி     ஆ. இலவச உணவு

இ. இலவச விடுதி     ஈ. இலவச உடுப்புகள்

62. நாடகத் தலைமையாசிரியர் எழுதாத நூலைச் சுட்டுக.

1. பவளக் கொடி     2. வீரஅபிமன்யு     3. பொன்விலங்கு

4. சதி அனுசுயா     5. யயாதி

அ. 1 மற்றும் 2     ஆ. 1 மற்றும் 3

இ. 3 மற்றும் 5     ஈ. 3 மற்றும் 4

63. கீழ்க்கண்டவற்றில் பொருந்தாததை தேர்க.

அ. சயந்தம்     ஆ. செயிற்றியம்

இ. மதிவாணன் நாடகத்தமிழ்     ஈ. கீர்த்தனை நாடகங்கள்

64. தொல்காப்பியம் குறிப்பிடும் மெய்ப்பாடுகளின் எண்ணிக்கை

அ. ஏழு     ஆ. எட்டு     இ. ஒன்பது     ஈ. பத்து

65. கீழ்க்கண்டவற்றுள் எது இனமுள்ள அடைமொழி ?

அ. தமிழ்ப்பாடநூல்     ஆ. கருங்காக்கை

இ. செங்கதிரோன்     ஈ. வெண்ணிலவு

66. பூவின் விவரம் பல கோடி அதனை எவர்

போதிப்பவர் தேடி – என்ற வரிகள் இடம்பெறுவது?

அ. கோவலன் சரித்திரம்     ஆ. சதி அனுசுயா

இ. சதி சுலோசனா ஈ. இலவகுசா

67. பிரேம் சந்த் எந்த மொழியில் புகழ்பெற்ற எழுத்தாளர் ஆவார்?

அ. மலையாள மொழியில்

ஆ. இந்தி மொழியில்

இ. கன்னட மொழியில்

ஈ. மராத்திய மொழியில்

68. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்

பெற்றான் பொருள்வைப் புழி - இதில் புழி என்பது...?

அ. இடம் ஆ. அறிவு இ. பண்பு ஈ. அழிவு

69. "பூவும் புகையும் பொங்கலும்" என்ற வரிகள் இடம்பெற்ற நூல்?

அ. தமிழ் நெஞ்சம் ஆ. சங்கத் தமிழ் புலவர் வரிசை

இ. தமிழின்பம் ஈ. தமிழின் சிறப்பு

70. வரை என்பதன் பொருள் என்ன?

அ. விரைவு ஆ. கோடு இ. பூதரம் ஈ. குன்று

71. தமிழ் இலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் எனப் பொருள்

இருந்ததனை குறிப்பிடும் நூல்கள்..?

அ. புறநானூறு, குறுந்தொகை ஆ. பரிபாடல், குறுந்தொகை

இ. பரிபாடல், நற்றிணை ஈ. பரிபாடல், அகநானூறு

72. கொடைக்குணம் கதையின் ஆசிரியர் யார்?

அ. க.கௌ. முத்தழகர் ஆ. கழனியூரன்

இ. பி.எம். முத்து ஈ. சே.சுந்தராசன்

73. சரியற்றதைத் தேர்ந்தெடுக்க.

அ. பாரதிக்குப் பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவர் - ந. பிச்சமூர்த்தி

ஆ. 1938 – 1954 வரை வழக்குரைஞர்

இ. ந.பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளின் எண்ணிக்கை – எண்பத்து மூன்று

ஈ. இவர் காலம் - 15.08. 1900 முதல் 04.12. 1976

74. கவிச்சக்கரவர்த்தி எழுதாத நூலைச் சுட்டுக.

அ. சரசுவதி அந்தாதி ஆ. ஏரெண்பது

இ. சிலையெழுபது ஈ. திருக்கை வழக்கம்

75. கம்பர் உழவர்களை எவ்வாறு அழைக்கிறார்?

அ. உலகத்தை ஆளுகின்றவர்கள்

ஆ. தேவலோகத்தை ஆளுகின்றவர்கள்

இ. மேகத்தை ஆளுகின்றவர்கள்

ஈ. மனத்தினை ஆளுகின்றவர்கள்

76. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்

வேண்டாது சாலப் படும் - என்னும் குறள் உணர்த்தும் கருத்து?

அ. பருவத்தே பயிர் செய் ஆடிப்பட்டம் தேடி விதை

ஆ. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

இ. அகல உழுவதனை விட ஆழ உழுதல் நன்று

ஈ. கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்.

77. மதோன்மத்தர் என அழைக்கப்படுபவர் யார்?

அ. முருகன் ஆ. சிவன் இ. திருமால் ஈ. இந்திரன்

78. பொருத்தமில்லாததைக் கண்டுபிடி.

அ. ஆறாம் வேற்றுமை ஆ. மூன்றாம் வேற்றுமை

இ. முதல் வேற்றுமை ஈ. இரண்டாம் வேற்றுமை

79. பண்டைய நாளில் பெண்கள் அரங்கு இழைத்து நெல்லிக்காய்களை வைத்து நகர்த்தி ஆடும் ஆட்டம் எது?

அ. வட்டாடுதல் ஆ. ஓரையாட்டம் இ. கழங்கு ஈ. அம்மானை

80. கணித மேதை இராமானுஜனைக் காண வந்த ஹார்டியின்

புகழ்பெற்ற டாக்சி எண் யாது?

அ. 1719 ஆ. 1729 இ. 1739 ஈ. 1749

81. தமிழகத்தின் அன்னிபெசன்ட் என்று புகழ்ந்தவர் யார்?

அ. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

ஆ. அம்புஜத்தம்மாள்

இ. அஞ்சலையம்மாள்

ஈ. அறிஞர் அண்ணா

82. தென்கரை நாட்டில் மருதீசர் வீற்றிருக்கும் ஊர்?

அ. முக்கூடல் ஆ. மருதூர் இ. ஆசூர் வடகரை ஈ. ஏதுமில்லை

83. மதுரையில் உள்ள தமுக்கம் மைதானம் எதற்கு பெயர் பெற்றது?

அ. யானைப்போர் ஆ. ஆட்டுகிடாய்ப் போர்

இ. சேவற் போர் ஈ. குத்துச்சண்டை

84. ஒவ்வொரு பயனிலைக்கும் பின்னரும் எதனை இடுதல் வேண்டும்?

அ. ஒற்றை மேற்கோள் ஆ. காற்புள்ளி

இ. முற்றுப்புள்ளி ஈ. அரைப்புள்ளி

85. தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை என்ற அடிகளால் புகழப்படுபவர் யார்?

அ. பாரதியார் ஆ. பாரதிதாசன்

இ. நாமக்கல் கவிஞர் ஈ. வாணிதாசன்

86. நாளை என் தாய்மொழி சாகுமானால் - இன்றே

நான் இறந்து விடுவேன் என்று கூறியவர் யார்?

அ. பாரதிதாசன் ஆ. ரசூல் கம்சதேவ்

இ. தமிழ்நாட்டின் ரசூல் கம்சதேவ் ஈ. அ (ம) இ

87. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலின் ஆசிரியர்?

அ. கால்டுவெல் ஆ. ஜி.யு.போப்

இ. வீரமாமுனிவர் ஈ. ச. அகத்தியலிங்கம்

88. வலக்கை தருவது இடக்கைக்கு தெரியக் கூடாது என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் யார்?

அ. மு.வ ஆ. கி.ஆ.பெ. இ. ரா.பி. ஈ. வ.ரா

89. “கதர் அணிந்தவர்கள் உள்ளே வரவும்” என்று யாருடைய வீட்டின் முன்பு எழுதப்பட்டிருந்தது?

அ. இராமாமிர்தம் ஆ. அஞ்சலையம்மாள்

இ. அசலாம்பிகை ஈ. அம்புஜத்தம்மாள்

90. உருபின்றி வரும் வேற்றுமைகளை கண்டுபிடி.

அ. ஒன்று, ஏழு ஆ. இரண்டு, எட்டு

இ. ஒன்று, எட்டு ஈ. மூன்று, எட்டு

91. போலி எத்தனை வகைப்படும்?

அ. 2 ஆ. 3 இ. 4 ஈ. 5

92. பிறமொழிச் சொற்களில் பொருந்தாதது எது?

அ. அனுமதி - இசைவு

ஆ. ஆதவன் - ஞாயிறு

இ. இம்சை - துன்பம்

ஈ. ஐதிகம் - இயல்பு வழக்கு

93. மானமே பெரிதென நினைத்தான் தமிழன் என்றவர் யார்?

அ. நாமக்கல் கவிஞர் ஆ. அறிஞர் அண்ணா

இ. பாரதியார் ஈ. மு. வரதராசனார்

94. ‘சோ’ என்னும் ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருளைத் தேர்க

அ. நெருப்பு ஆ. அம்பு இ. அரண் இ. தலைவன்

95. தமிழ் என்று தோள் தட்டி ஆடு என்று பாடிய கவிஞன் யார்?

அ. தேசியக்கவி ஆ. விடுதலைக் கவி

இ. புரட்சிக்கவிஞர் ஈ. அ(ம) இ

96. மணநூல் இந்நூலின் ஆசிரியர் யார்?

அ. திருத்தக்க தேவர் ஆ. கம்பர்

இ. சீத்தலைச் சாத்தனார் ஈ. இளங்கோவடிகள்

97. தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும் -

இவ்வடியில் பயின்று வரும் அணியைக் காண்க?

அ. உருவக அணி ஆ. இயல்பு நவிற்சி அணி

இ. உயர்வு நவிற்சி அணி ஈ. ஊவமையணி

98. பொருந்தாத இணையைத் தேர்க:

அ. இல்லறத்திற்கு பொருள் கொடுத்தவன் - நள்ளி

ஆ. கூத்தர்க்கு நாடு கொடுத்தவன் - ஓரி

இ. வந்தவர்க்கு ஊர் கொடுத்தவன் - காரி

ஈ. புலவர்க்கு நெல்லிக்கனி கொடுத்தவன் - அதியமான்

99. மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு?

அ. 1901 செப்டம்பர் 16 ஆ. 1901 செப்டம்பர் 15

இ. 1901 செப்டம்பர் 14 ஈ. 1901 செப்டம்பர் 17

100. அம்மானைப் பாடலில் தண்டிக்கப்படும் தெய்வம்?

அ. முருகன் ஆ. திருமால் இ. சிவன் ஈ. பிரம்மன்

*வாழ்க தமிழ்.....! வெல்க தமிழ்....!*

மதுரமங்கலம் இலவச TNPSC பயிற்சி மையம்

மாதிரி தேர்வு – 2 பொதுத்தமிழ் ( ஏழாம் வகுப்பு )

நாள் - 13.05.2017…………

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1.A** | **11.B** | **21.C** | **31.A** | **41.C** | **51.C** | **61.C** | **71.B** | **81.D** | **91.B** |
| **2.A** | **12.A** | **22.A** | **32.A** | **42.A** | **52.A** | **62.C** | **72.B** | **82.B** | **92D** |
| **3.C** | **13.A** | **23.A** | **33.B** | **43.A** | **53.A** | **63.D** | **73.B** | **83.A** | **93.B** |
| **4.C** | **14.B** | **24.B** | **34.B** | **44.A** | **54.B** | **64.B** | **74.B** | **84.D** | **94.C** |
| **5.A** | **15.B** | **25.D** | **35.D** | **45.B** | **55.D** | **65.A** | **75.C** | **85.A** | **95.C** |
| **6.A** | **16.A** | **26.D** | **36.C** | **46.A** | **56.B** | **66.B** | **76.C** | **86.B** | **96.A** |
| **7.A** | **17.A** | **27.B** | **37.C** | **47.C** | **57.C** | **67.B** | **77.B** | **87.A** | **97.B** |
| **8.B** | **18.A** | **28.C** | **38.A** | **48.A** | **58.B** | **68.A** | **78.C** | **88.A** | **98.C** |
| **9.A** | **19.D** | **29.B** | **39.C** | **49.B** | **59.C** | **69.C** | **79.A** | **89.A** | **99.C** |
| **10.C** | **20.C** | **30.C** | **40.D** | **50.D** | **60.C** | **70.C** | **80.B** | **90.C** | **100.D** |